ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 1.5 – தன்முகத்து

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 1.5 – தன்முகத்து

‡ தன்முகத்துச் சுட்டி ⋆ தூங்கத் தூங்கத் தவழ்ந்து போய் ⋆
 பொன்முகக் கிண்கிணி ஆர்ப்பப் ⋆ புழுதி அளைகின்றான் ⋆
என் மகன் கோவிந்தன் ⋆ கூத்தினை இள மா மதீ ! ⋆
 நின்முகம் கண்ணுள ஆகில் ⋆ நீ இங்கே நோக்கிப் போ || **1.5.1** ||

என் சிறுக்குட்டன் ⋆ எனக்கோர் இன்னமுதெம் பிரான் ⋆
 தன் சிறுக் கைகளால் ⋆ காட்டிக் காட்டி அழைக்கின்றான் ⋆
அஞ்சன வண்ணனோடு ⋆ ஆடல் ஆட உறுதியேல் ⋆
 மஞ்சில் மறையாதே ⋆ மா மதீ ! மகிழ்ந்தோடிவா || **1.5.2** ||

சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து ⋆ சோதி பரந்தெங்கும் ⋆
 எத்தனை செய்யினும் ⋆ என்மகன் முகம் நேரொவ்வாய் ⋆
வித்தகன் வேங்கட வாணன் ⋆ உன்னை விளிக்கின்ற ⋆
 கைத்தலம் நோவாமே ⋆ அம்புலீ ! கடிதோடிவா || **1.5.3** ||

சக்கரக் கையன் ⋆ தடங்கண்ணால் மலர விழித்து ⋆
 ஒக்கலைமேல் இருந்து ⋆ உன்னையே சுட்டிக் காட்டும் காண் ⋆
தக்கதறிதியேல் ⋆ சந்திரா ! சலம் செய்யாதே ⋆
 மக்கட் பெறாத ⋆ மலடனல்லையேல் வா கண்டாய் || **1.5.4** ||

அழகிய வாயில் ⋆ அமுத ஊறல் தெளிவுறா ⋆
 மழலை முற்றாத ⋆ இளஞ்சொல்லால் உன்னைக் கூவுகின்றான் ⋆
குழகன் சிரீதரன் ⋆ கூவக்கூவ நீ போதியேல் ⋆
 புழையில ஆகாதே ⋆ நின் செவி புகர் மா மதீ ! || **1.5.5** ||

தண்டொடு சக்கரம் ⋆ சார்ங்கம் ஏந்தும் தடக்கையன் ⋆
கண் துயில் கொள்ளக் கருதிக் ⋆ கொட்டாவி கொள்கின்றான் ⋆
உண்ட முலைப்பால் அறா கண்டாய் ⋆ உறங்காவிடில் ⋆
விண் தனில் மன்னிய ⋆ மா மதீ ! விரைந்தோடிவா ‖ **1.5.6** ‖

பாலகன் என்று ⋆ பரிபவம் செய்யேல் ⋆ பண்டொரு நாள்
ஆலின் இலை வளர்ந்த ⋆ சிறுக்கன் அவன் இவன் ⋆
மேல் எழப் பாய்ந்து ⋆ பிடித்துக்கொள்ளும் வெகுளுமேல் ⋆
மாலை மதியாதே ⋆ மா மதீ ! மகிழ்ந்தோடிவா ‖ **1.5.7** ‖

சிறியன் என்றென் இளஞ்சிங்கத்தை ⋆ இகழேல் கண்டாய் ⋆
சிறுமையின் வார்த்தையை ⋆ மாவலியிடைச் சென்று கேள் ⋆
சிறுமைப் பிழை கொள்ளில் ⋆ நீயும் உன் தேவைக்குரியை காண் ⋆
நிறைமதீ ! நெடுமால் ⋆ விரைந்துன்னைக் கூவுகின்றான் ‖ **1.5.8** ‖

தாழியில் வெண்ணெய் ⋆ தடங்கை ஆர விழுங்கிய ⋆
பேழை வயிற்றெம் பிரான் கண்டாய் ⋆ உன்னைக் கூவுகின்றான் ⋆
ஆழி கொண்டுன்னை எறியும் ⋆ ஐயுறவில்லை காண் ⋆
வாழ உறுதியேல் ⋆ மா மதீ ! மகிழ்ந்தோடிவா ‖ **1.5.9** ‖

‡ மைத்தடங்கண்ணி ⋆ யசோதை தன் மகனுக்கு ⋆ இவை
ஒத்தன சொல்லி ⋆ உரைத்த மாற்றம் ⋆ ஒளிபுத்தூர்
வித்தகன் விட்டுசித்தன் ⋆ விரித்த தமிழ் இவை ⋆
எத்தனையும் சொல்ல வல்லவர்க்கு ⋆ இடர் இல்லையே ‖ **1.5.10** ‖

அடிவரவு — தன் என் சுற்றும் சக்கரம் அழகிய தண்டொடு பாலகன் சிறியன் தாழியில் மை உய்ய

தன்முகத்து முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்